**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை**

**அசல் வழக்கு எண். 252/1995**

PW1 – திருமதி. ஆனந்தம்மாள் நாள். 06.02.2026

(1969ம் ஆண்டில் 44வது பிரிவின்படி) திரு.J.அந்தோணி ரிஷான்தேவ், பி.பி.ஏ., எல்,எல்.,பி. (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற (இளநிலை உதவியாளர்) திருமதி.ராமு என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

**சாட்சி மனுவின் பெயரில் மனு அனுமதிக்கப்பட்டு மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.**

1. எனக்கு பிறப்பு சான்றிதழ் பதிவு செய்யப்பட்டதா என்றால் அந்த விவரம் தற்போது நினைவில் இல்லை. 1ம் பிரதிவாதி கருப்பையாதேவர் எனது தகப்பனார் ஆவார். பிரதிவாதி ராஜாம்மாள் எனக்கு அக்கா. 3ம் பிரதிவாதி எனது உடன் பிறந்தவர். 4,5, பிரதிவாதிகள் எனது தகப்பனாரை 2வது மனைவியான எனது சின்னம்மாவுக்கு பிறந்தவர்கள். எனது அம்மா பெயர் காளியம்மாள். அவர் தற்போது உயிரோடு இல்லை. எனது சின்னம்மா பெயர் காந்தி அவர் தற்போது உயிரோடு இல்லை.

2. வழக்கின் 6ம் பிரதிவாதி முதல் பிற பிரதிவாதிகள் அனைவரும் தாவா சொத்தை எனது தகப்பனாரிடம் இருந்து கிரையம் பெற்றவர்கள் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் பிராது தாக்கல் செய்த காரத்தில் 6 முதல் 35 பிரதிவாதிகள் எனது தகப்பனாரிடம் இருந்து கிரையம் பெற்ற நபர்கள் என்று தெரிவித்துள்ளேன் என்றால் தற்போது நினைவில் இல்லை. 6ம் பிரதிவாதி அருள் தாவா சொத்தின் ஒரு பகுதியை

எனது தகப்பனாரிடம் இருந்து எப்போது கிரையம் பெற்றார் என்றால் தற்போது நினைவில் இல்லை. பிரதிவாதி அருள் தாவா சொத்தில் எப்போது வீடு கட்டினார் என்றால் வழக்கு தாக்கல் செய்வதற்கு 2 ஆண்டுகள் முன்பு வரை தாவா சொத்தில் பத்து வீடுகள் இருந்தது.

3. 6 முதல் 36 பிரதிவாதிகளும் யாரெல்லாம் வழக்கிற்கு முன்பாகவும் யாரெல்லாம் வழக்கிற்கு பின்பாகவும் வீடு கட்டினார்கள் என்று எனக்கு தற்போது நினைவில் இல்லை. தாவா சொத்தில் தற்போது 40 வீடுகள் உள்ளது. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பதாக இருந்ததாக சொல்லப்படும் பத்து வீடுகளை பிராது சொத்து விவரத்தில் காட்டவில்லை என்றால் தற்போது நினைவில் இல்லை. 4ம் பிரதிவாதி புகழேந்தி சி.கே.மங்களம் இராமநாதபுரம் நெடுஞ்சாலையில் பெட்ரோல் பங்கும் 2 பெரிய கட்டுமானமும் கட்டியுள்ளார் என்றால் சரிதான்.

4. மேற்படி புகழேந்தி கட்டுமானங்கள் மற்றும் பெட்ரோல் பங்கு வைப்பதற்கு காரைக்குடி ஸ்ரீராம் பைனான்சில் பெருந்தொகையை கடனாக பெற்றுள்ளார் என்றால் நினைவில் இல்லை. மேற்படி கடன் தொகையை 4ம் பிரதிவாதி கட்டாததால் சொத்தை ஜப்தி செய்ய வந்தபோது நான் உயர் நீதிமன்றம் மதுரைக்கிளையில் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். எனது தகப்பனார் என்னை இளவராக காண்பித்து கிரையம் ஏற்படுத்திய போது எனக்கு 17 வயது. எனக்கு எப்போது திருமணம் நடந்தது என்று நினைவில் இல்லை. எனக்கு நான்கு பிள்ளைகள் இருக்கிறார்கள். எனது முதல் பிள்ளைக்கு சுமார் 35 வயது.

5. திருமணம் நடந்த எத்தனை வருடங்கள் கழித்து முதல் பிள்ளை பிறந்தது என்று நினைவில் இல்லை. எனது கடைசி பிள்ளைக்கு தற்போது சுமார் 30 வயது இருக்கும்.

எனது முதல் 2 பிள்ளைகள் குருந்தனக்கோட்டையில் கல்வி பயின்றார்கள். எனது பிள்ளைகளுக்கு பிறப்பு சான்றிதழ் உள்ளது. வழக்கின் 6 முதல் பிற பிரவாதிகளுக்கு வழக்கு சொத்தை எனது தகப்பனார் கிரையம் கொடுத்தது தவறு என்றும் அதனால் காலி செய்து தரும் படி அறிவிப்பு அனுப்பப்பட்டதா என்றால் அறிவிப்பு அனுப்பினோம். 1980 ம் வருடம் எனக்கு என்ன வயது என்று நினைவில் இல்லை.

6. 6 முதல் பிற பிரதிவாதிகள் சட்டத்திறகு உட்பட்டு தான் எனது தகப்பனாரிடம் இருந்து என்னை இளவராக காண்பித்து கிரையம் பெற்றுள்ளார்கள் என்றும் அதனால் அவர்கள் ஆக்கிரமிப்பாளர்கள் இல்லை என்று முறையாக தான் சொத்தை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் தாவா சொத்தை கிரையம் பெற்ற காலத்தில் benami transactions act இருந்ததால் என்னை வைத்து கிரையம் பெற்றார் என்றால் என்னுடைய வருமானத்தை வைத்து எனக்காக வாங்கவில்லை என்றால் சரியல்ல, எனது அம்மாவின் நகையை வைத்து தான் கிரையம் பெற்றார். எனது அம்மாவின் நகையில் எனக்கும் எனது அப்பாவிற்கும் உரிமை உள்ளது. எவ்வளவு நகையை எங்கு எப்படி விற்றார் என்று எனக்கு தெரியாது. ஆனால் விற்ற தொகையில் தான் கிரையம் பெற்றார்.

7. எனது தாயாரின் நகையை வைத்து கிரையம் பெறவில்லை என்றும் எனது தகப்பனாரின் சொந்த வருமானத்தை வைத்து தான் கிரையம் பெற்றார் என்றால் சரியல்ல. கிரையதாரர்களின் கிரையப்பத்திரத்தை சான்றிட்ட நகல் எடுத்து தாக்கல் செய்யாததின் காரணமானது வழககு கால அவகாச சட்த்திற்குள் தாக்கல் செய்யவில்லை என தெரிந்துவிடும் என்பதே ஆகும் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்த காலத்திலேயே வழக்குச் சொத்தின் மதிப்பு ரூபாய் 5 கோடி இருக்கும் என்றும் அதனை மறைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது தாவா சொத்தின் மதிப்பு கட்டுமானங்களுடன் சேர்த்து 20 கோடி மேல் இருக்கும் என்றால் நான் இடத்தை தான் கேட்கிறேன். கட்டுமானங்கள் தேவை இல்லை.

8. வழக்கு நிலுவையில் இருந்த காலத்தில் தாவா சொத்தில் கட்டுமானம் கட்டிய நபர்கள் மீது காவல்நிலையத்தில் புகார் அளித்தோமா என்றால் இல்லை. திருவாடனையில் இருந்து குருந்தனக்கோட்டை எவ்வளவு தூரம் என்று தெரியாது. வழக்கு நிலுவையில் இருக்கும் போது கட்டுமானங்கள் கட்டிய விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான், வழக்கு நிலுவையில் இருந்ததால் வழக்கில் பார்த்துக் கொள்ளலாம் என்று கண்டு கொள்ளவில்லை. பிரதிவாதிகளை மிரட்டி பணியவைக்கும் நோக்கத்தில் தான் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் பிராதில் கண்டுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

(ஒம்/திரு.J.அந்தோணி ரிஷான்தேவ்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவாடானை